MINISTRY OF MANPOWER

ACE

# CONNECT with ACE

வெளிநாட்டு ஊழியர்களுக்கான மாதாந்திர மின் செய்திமடல்



மே 2023



## இந்த இதழில்:

ஸ்கேம்ஷீல்ட் செயலி

கொவிட்-19 சூழலில் வாழும்போது பாதுகாப்பாக இருப்பது

ரமதான் மற்றும் ஹரி ராயா கொண்டாட்டங்கள்

# முக்கிய அறிவிப்புகள்



# ScamShield செயலியைப் பயன்படுத்தி மோசடிகளிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்

## முக்கிய அம்சங்கள்

1

மோசடி அழைப்புகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்று நம்பப்படும் தொலைபேசி எண்களிலிருந்து வரும் அழைப்புகளைத் தடுக்கிறது (அனைத்து சாதனங்களும்)



2

மோசடி குறுஞ்செய்திகளைக் கண்டறிந்து அகற்றுகிறது (iOS மட்டும்)



3

மோசடி குறுஞ்செய்திகளைக் கண்டறிந்து, பயனர்களுக்கு எச்சரிக்கைகளை அனுப்புகிறது (ஆண்ட்ராய்டு மட்டும்)



4

பெறப்பட்ட மோசடி செய்திகளைப் பற்றி எளிதில் புகாரளிக்க அனுமதிக்கிறது



## இன்றே இலவச செயலியைப் பதிவிறக்கம் செய்யுங்கள்!

NCPC மற்றும் SPF-ஆல் நிர்வகிக்கப்படும் தரவுத்தளத்திலிருந்து ScamShield மோசடி குறுஞ்செய்திகளைக் கண்டறிந்து அழைப்புகளைத் தடுக்கிறது.

GET IT ON Google Play | Download on the App Store



# கொவிட்-19 உடன் வாழ்கையில் பாதுகாப்பாக இருப்பது



எப்போதும் தனிநபர் சுகாதாரத்தைப் பின்பற்றுங்கள்



உங்களுக்கு உடல் நலம் இல்லையென்றால், கூட்டம் உள்ள இடத்துக்குப் போகும்போது அல்லது பொதுபோக்குவரத்தில் பயணம் செய்யும் போது முகக் கவசம் அணியுங்கள்



உங்களுடைய அறிகுறிகள் மறையும் வரை வீட்டுக்குள், அல்லது அறைக்குள் இருங்கள்



உடல் நலம் இல்லையென்றால் கூட்டம் உள்ள இடத்துக்குப் போவதைத் தவிர்க்கவும்



உங்களுடைய அறிகுறிகள் மோசமானால், (உதாரணம்: மூச்சுத் திணறல்அல்லது நெஞ்சு வலி) 995 என்ற எண்ணை அழைக்கவும்



பாதுகாப்பாக இருக்க கொவிட்-19 தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளுங்கள்



# இணக்கமாக வாழுங்கள்!

நாம் ஒன்றாக வேலை செய்து, ஒன்றாக வாழும் சூழலில் ஒருவரையொருவர் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை நமக்கு நாமே நினைவு படுத்திக்கொள்வோமாக. வன்முறையைநாடாமல் நாம் நமது பிரச்சினைகளை இணக்கமான முறையில் பேசித் தீர்த்துக்கொள்ள முயல வேண்டும். வன்முறையைப் பயன்படுத்துவது பிறருக்குத் தீங்கு விளைவிப்பதுடன், அது சட்டத்திற்கு எதிரானதும் கூட.

அனைவருக்கும் இணக்கமான சுற்றுச்சூழலை உருவாக்க ஒன்றிணைந்து செயல்படுவோம்!

# நிகழ்ச்சியின் சிறப்பம்சங்கள்



## கரையோரப் பூங்காவில் ஹரி ராயா கொண்டாட்டம்

ஏப்ரல் 23 அன்று, மனிதவள மூத்த அமைச்சர் டாக்டர் கோ போ கூன் அவர்களுடன், இரட்சண்ய சேனை, மை பிரதர் எஸ்ஜி, டச் இன்டர்நேஷனல் மற்றும் டெம்பனிஸ் மெரிடியன் ஜூனியர் கல்லூரி ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த எங்கள் கூட்டாளர்களுடன் சுமார் 200 வெளிநாட்டு ஊழியர்களைக் கரையோரப் பூங்காவிற்கு நாங்கள் அழைத்துச் சென்றோம். நமது வெளிநாட்டு சகோதரர்கள் இன்சுவை உணவுண்டு மிரர் மியூஸ்க் ஸ்டேஷன் படைத்த கலை நிகழ்ச்சியைக் கண்டவாறு மாலைப் பொழுதை இன்பமாய்க் களித்தனர்.

## சாஹூருக்காக பிபிடி லாட்ஜ் 1A தங்குவிடுத்திக்கு சென்ற மனிதவள அமைச்சர், டாக்டர் டான் சீ லெங்

மனிதவள அமைச்சர் டாக்டர் டான் சீ லெங் பிபிடி லாட்ஜ் 1A குடியிருப்பாளர்களுடன் இவ்வாண்டு ரமதானின் கடைசி சாஹூரில் கலந்துக்கொண்டார். வேலையிடப் பாதுகாப்பிற்கு முதலிடம் அளிக்கவும், ஒருவரையொருவர் கவனித்துக்கொள்ளவும் அமைச்சர் அனைவருக்கும் நினைவூட்டினார்.






## ஏஸ் அதிகாரிகள் ரமதான் உணவைப் பொட்டலமிடுவதும் விநியோகிப்பதும்.

ஏப்ரல் 8 ஆம் தேதி, இந்திய முஸ்லீம் சமூகச் சேவை கழகத்துடன் (IMSSA) இணைந்து, 70 ஏஸ் அதிகாரிகள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊழியர்களுக்கு இஃப்தாருக்காக 2,000 உணவுப் பொட்டலங்களை வழங்கினர். உணவுப் பொட்டலங்கள் சில வெஸ்ட்லைட் உட்லண்ட்ஸ் தங்குவிடுதி மற்றும் கொக்ரேன் லாட்ஜ் 1 மற்றும் 2 ஆகிய இடங்களில் வழங்கப்பட்டன.



நீங்கள் பங்கேற்கக்கூடிய பல்வேறு நேரடி மற்றும் இணைய நடவடிக்கைகளைப் பற்றி மேலும் அறிய இங்கே காணப்படும் QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்!

அண்மைய செய்திகள் மற்றும் புதுப்பிப்புகளைப் பற்றி அறிய எங்கள் அதிகாரப்பூர்வ ஒளிவழிகளில் எங்களைப் பின்தொடரவும்!

- ஏஸ் குழுவின் ஃபேஸ்புக் பக்கம்
- ஏஸ் குழுவின் டிக்டொக் ஒளிவழி
- மனிதவள அமைச்சின் யூடியூப் ஒளிவழி